உ

ஓம் குஹாய நம:

# திருப்புகழமிர்தம்.

(All Rights Reserved)

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன்றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம் "


| | | |
|---|---|---|
| மலர். 2 | ஈஸ்வர ௵ ஐப்பசி ௴ 1௳ | இதழ் 7 |
| Vol. 2 | அக்டோபர்—1937 | No. 7 |


## திருப்புகழ்.

### திருச்செந்தூர்.

(21) அமுதுததி விடமுமிழு செங்கட் டிங்கட்
பகவினொளிர் வெளிறெயிறு துஞ்சற் குஞ்சித்
தலையுமுடை யவனரவ தண்டச் சண்டச்
சமனோலை

அதுவருகு மளவிலுயி ரங்கிட் டிங்குப்
பறைதிமிலை திமிர்தமிகு தம்பட் டம்பற்
கரையவுற வினரலற வுந்திச் சந்தித்
தெருவூடே

எமதுபொரு ளெனுமருளை யின்றிக் குன்றிப்
பிளவளவு தினையளவு பங்கிட் டுண்கைக்
கிளையமுது வசைதவிர இன்றைக் கன்றைக்
கெனநாடா

திடுககடி தெனுமுணர்வு பொன்றிக் கொண்டிட்
டுடுடுடுடு டுடுடுடுடு டுண்டுட் டுண்டுட்
டெனவகலு நெறிகருதி நெஞ்சத் தஞ்சிப்
பகிராதோ

குமுதபதி வகிரமுது சிந்தச் சிந்தச்
சரணபரி புரசுருதி கொஞ்சக் கொஞ்சக்
குடிலசடை பவுரிகொடு தொங்கப் பங்கிற்
கொடியாடக்
குலதடினி அசையஇசை பொங்கப் பொங்கக்
கழலதிர டெகுடெகுட டெங்கட் டெங்கத்
தொகுகுகுகு தொகுகுகுகு தொங்கத் தொங்கத்
தொகு தீ தோ
திமிதமென முழவொலிமு ழங்கச் செங்கைத்
தமருகம ததிர்சதியோ டன்பாக் கின்பத்
திறமுதவு பரதகுரு வந்திக குஞ்சற்
குருநாதா
திரளுமணி தரளமுயர் தெங்கிற் றங்கிப்
புரளஎறி திரைமகர சங்கத் துங்கத்
திமிரசல நிதிதழுவு செந்திற் கந்தப்
பெருமாளே.

## பதவுரை.

*குமுதபதி வகிர் - ஆம்பல் மலருக்குப் பதியாகிய சந்திரனது பிறை, அமுது சிந்த சிந்த - தனது அமிர்த கிரணங்களை மிகவும் பொழியவும், சரண பரிபுர - திருவடியி லணிந்துள்ள சிலம்பானது, சுருதி கொஞ்ச கொஞ்ச - வேத வசனங்களை இனிமையுடன் ஒலிக்கவும், குடில சடை - வளைவுடைய சடையானது, பவுரி கொடு தொங்க - அந்தத் திருநடனத்திற் கிணங்க அசைந்து (அழகுடன்) தொங்கவும், பங்கில் கொடியாட - ஒரு பக்கத்தில் கொடியனைய சிவகாமசுந்தரி யாடவும், குலதடினி அசைய - மேன்மை பொருந்திய கங்காநதி அசையவும், இசை பொங்க பொங்க - இனிய பாடல்களின் ஒலியும் வாத்திய ஒலியும் மிகுதியாக சப்திக்கவும், கழல் அதிர - பாதத்தி லணிந்துள்ள வீரகண்டாமணி அதிர்ந்து ஒலிக்கவும், டெகுடெகுட டெங்கட் டெங்கத் தொகுகுகுகு தொகுகுகுகு தொங்கத் தொங்கத் தொகு தீ தோ திமிதம் என முழவொலி முழங்க - இத்தகைய தாளவரிசையுடன் மேளவொலிகள் முழங்கவும், செம் கை - சிவந்த கரத்திலுள்ள, தமருகம் அது அதிர் சதியொடு - உடுக்கையானது அதிரும் தாளவொத்துடனும், அன்பர்க்கு இன்ப திறம் உதவும் -*

(ஆனந்தத்திருநடனம்புரிந்து) அன்பு செய்யும் அடியார்கட்கு என்று மழியாத இன்பநலனை வழங்கும, பாதகுரு - பாத நாடகத்திற்கு ஆசிரியராகிய சிவபெருமான், வந்திக்கும வணங்குகின்ற, சற்குருநாதா - ஞானசிரியரே! திரளு மணிதாளம் - உருட்சியாகத் திரளும் முத்து மணிகள், உயர் தெங்கில் தங்கி புரள - உயர்ந்து வளர்ந்துள்ள தென்னைமரங்களின்மீது தங்கிப் புரளுமாறு, எறி திரை - அம்முத்துக் களை வீசி எறிகின்ற அலைகளையுடையதும், மகர சங்க - மகரமீன் களின் கூட்டத்தையுடையதும், துங்க - தூய்மையுடையதும், திமிர - இருள்போல கருநிறத்தையுடையதும் ஆகிய, சலதி தழுவு - சமுத்திரமணைந்துள்ள, செந்தில் கந்த - செந்திலம்பதியில் வாழுகின்ற கந்தப்பெருமானே, பெருமாளே - பெருமையின் மிக்கவரே!, அமுது உததி விடம உமிழு - பாற்கடலிறதோன்றிய ஆலகாலவிடத்தைக் கக்கும, செம் கண - சிவந்த கணகளையும், திங்கள் பகவின் ஒளிர் - சந்திரனது பிளவைப் (பிறை) போற பிரகாசிக்கின்ற, வெளிறு எயிறு வெண்மையான பற்களையும, துஞசல் குஞசி தலையும் உடையவன் - சுருளுகின்ற தன்மையுடைய மயிர்க்குடுமியோடுகூடிய தலையையும் உடையவனாகிய, அரவ தண்ட - பேரொலியுடன் வந்து உயிர்களை காலாந்தரத்தில் தண்டிக்கும், சண்டசமன் ஓலை அதுவருகும் அளவில்- வேகதலையுடைய கூற்றுவனது ஓலையானது வருகின்ற காலத்தில், உயிர் அங்கிட்டு - ஆவி இயமனுலகிற் செல்ல, இங்கு - உடலிருக்கும் இவ்விடத்திலே, பறை - பறை வாத்தியங்களும், திமிலை - பம்பையும், திமிர்தமிகு தம்பட்டம் - ஒலிமிகுந்த தம்பட்டமெனகிற வாத்தியமும், பல் கரைய - பலவிதமாக ஒலிக்கவும், உறவினர் அலற - உறவின் முறையோர் துன்புற்றுக் கதறி அழவும், எமது பொருள் எனும் மருளை இன்றி - எம்முடைய பொருள் என்னும் மயக்கமின்றி, குன்றி பிளவு அளவு - குன்றிமணியிற் பாதியாகிலும், தினை அளவு - தினை யரிசி யளவாகிலும், பங்கிட்டு உண்கைக்கு இலைய - ஏழைகளுக்குப் பங்கிட்டுத்தந்து உண்ணவேணடிய அறவழியில் நின்றும் இளைத்து, முது வசை தவிர - லோபி என்ற பழமையான வசைச்சொல் நீங்குமாறு, இன்றைக்கு அன்றைக்கு என நாடாது - இன்றைக்கு அறம் புரிவது நாளைக்குப் புரிவது என்று எண்ணாது, இடுககடிது எனும் - விரைந்து வறிஞர்க்குப் பிச்சை யிடு என்று (அறிஞர்) உரைக்கும் உரைகளால் ஏற்படும், உணர்வு பொன்றிக் கொண்டிட்டு - அறிவு அழிந்துபோய், உந்தி சந்தி தெருவூடே - (பிணத்தை) எடுத்துக்

கொண்டு பல தெருக்கூடும் சந்திகளின் வழியாக, டுடுடுடு என அக லும - டுடுடுடு என்ற பறை ஒலியுடன் கொண்டுபோகின்ற, நெறி கருதி - மார்க்கத்தை நினைத்து, நெஞ்சத்து அஞ்சி - மனத்தில் இவ் வாறு நாமும் ஒரு நாளைக்குச் செல்லவேண்டிவரும் என்று பயந்து, பகிரா தோ - ஏழைகளுக்கு என் வருவாயில் பங்கிட்டு தருமம் புரிய மாட்டேனோ?

## பொழிப்புரை.

குமுத மலருக்குப் பதியாகிய சந்திரனது பிறை தனது அமிர்த கிரணங்களை மிகவும பொழியவும், திருவடியிலணிந்துள்ள சிலமபா னது வேத வொலியைச் செய்யவும், வளைவுடைய சடை அத் திரு நடனத்திறகிணங்க அசைந்து தொங்கவும், ஒருபக்கத்தில் கொடி யிடையுடை சிவகாமசுந்தரி ஆடவும், மேன்மை பொருந்திய கங்கா நதி அசையவும, பாடல்கள வாத்தியங்களின் இனிய ஒலி மிகுதி யாகப் பொங்கவும், பாதகமலத்திலுளள வீரகணடாமணி அதிர்ந்து ஒலிக்கவும, டெகுடெகுட டெங்கட் டெங்க தொகுகுகு தொகுகுகு தொங்கத் தொங்கத் தொகுதி தோ திமிதம் என்று முழவுகள முழங்க வும், சிவந்த கரத்திலுள்ள உடுக்கையின் தாளவொத்துடனும், ஆனந்த நிருத்தம் புரிந்து அன்பர்களுக்கு என்று மகலாத இன்ப வீட்டை வழங்கும் பரதநாடகத்திற்கு ஆசிரியராகிய சிவபெருமான் சிஷ்யபாவமூர்த்தியாக இருந்து வணங்கி வழிபாடு செய்யும் ஞானசிரி யரே! உருட்சியாகத திரளும் முத்துமணிகள் உயர்ந்த தென்னைமரத் தில் தங்கிப்புரளுமாறு வீசி எறிகின்ற அலைகளையுடையதும், மகரமீன் களின் கூட்டத்தையுடையதும், பரிசுத்தமானதும், இருள்போற் கரு நிறத்தையுடையதுமாகிய சமுத்திர மணைநதுள்ள திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள கந்தமூர்த்தியே! பெருமையிற் சிறந்தவரே! பாற் கடலில் தோன்றிய ஆலகாலவிடத்தைக் கக்கும் (கோபத்தினால்) சிவந்த கண்களையும், பிறைச் சந்திரனைப்போல் ஒளி செய்யும் வெண் ணிறமுடைய பற்களையும், சுருண்டுள்ள மயிர்க்குடுமியுடன் கூடிய தலையையும் உடையவனும, பேரொலியுடன் வந்து உயிர்களைக் காலாந் தரத்தில் வினைக்கேற்பத் தண்டிப்பவனும் வேகமுடையவனுமாகிய இயமனது ஓலை வருகின்ற காலத்தில் உயிர் இயமலோகஞ் செல்ல, உடல்மட்டுமுள்ள இவ்விடத்தில் பறை பம்பை ஒலியுடைய தம்பட் டம் முதலிய பலவிதமான வாத்தியங்கள் ஒலிக்கவும், உறவினர்

ஓவென்று கதறியழவும், எமது பொருள் என்றமயக்கமின்றி, குன்றி மணியில் பாதியாகிலும் தினையரிசியளவாகிலும் ஏழைகளுக்குப் பகிர்ந்து உண்ணுவதற்கு இளைத்து, லோபி என்றபழமையான வசைமொழி நீங்குமாறு இன்று அறஞ்செய்வோம் நாளை செய்வோம் என எண்ணாது விரைந்து தருமஞ்செய் என்ற அறிஞர் அறிவுரைகளால் ஏற்படுகின்ற அறிவு அழிந்து, பிணத்தை எடுத்துக்கொண்டு தெருக் கூடுமிடுகின்ற சந்திவழியாக டுடுடுடு என்ற பறை யொலியுடன் விணே போகின்ற மார்க்கத்தை நினைந்து நினைந்து, இவ்வாறு வறிதே ஒருநாள் அழிவு வருவது நிச்சயமென்று பயந்து பொருள் உள்ள போதே சிறிதாவது பகிர்ந்தளிக்க மாட்டேனே?

## விரிவுரை.

அமுதுததி விடமுமிழு செங்கண் :—

கூற்றுவனுடைய கணகள் மிகவும் பயங்கரத்தை விளைவிக்குமாறு கொடியவிடத்திற்கு நிகரான நெருப்புகளைப் பொழியும கூற்றுவனுக்கு இரண்டு உருவம் உள; ஒன்று புண்ணியசீலர்களுக்கு அருள் மேனி, ஒன்று பாவிகளுக்கு அச்சத்தைத்தரும் கோரவடிவு. இவ்விரண்டில் பாவமுடையோர்க்கு மிகவும் கோரவடிவுடன் தோன்றும் போது அக்கண்களில் அனல் சொரியும்.

> "எரிமுண்டடதென்ன விழித்துப்புகையெழப் போங்கு
> வெங்கூற்றன்"

—அலஙகாரம்.

தண்டம் :—

அறப்பான் மூன்றனுள் ஒன்று; அஃது ஒழுக்கத்தினும் வழக்கத்தினுந் திறமபிஞேரை அவற்றின் நெறியே நிறகுமாறு இறைவன் தண்டித்தலாம். இத்தொழில் இயமன் மேற்கொண்டிருக்கிறான். அற நெறி வழுவி மறநெறி சென்றோரைக் கூற்றுவன் தனது தூதுவர்களால் பற்பல துன்பங்களை விளைவிப்பன்.

சமன் ஓலை :—

ஆன்மலாபத்தை யடைதற்பொருட்டுத் தோன்றிய நாம் ஆவியீடேறும் வழியைக் கருதாமல், வறிதே வாணாளை வீணாக்கிக்கொண்டிருந்தால் கூற்றுவன் ஓலையை எடுத்துக்கொண்டுவந்து உயிரைக் கொண்டு போகின்றான். அவ்வோலை வருவதற்குமுன் இறைவன் திருவருளைப் பெறுவதற்கு மிகமிக விரைந்து முயலுதல் வேண்டும்.

இயமன் ஓலைகாட்டிக்கொண்டு போவான் என்பதை அடியில் வருந் திருவாக்காலுணர்க.

"காலமாச்சு வருகென ஓலைகாட்டி யமபடர்
காவலாக்கி யுயிரது கோடுபோமுன்
காமவாழ்கை பொடிபட ஞானம்வாய்த்த கழலிணை
காதலாற கருதுமுணா தருவாயே"
—(ஆலமேற்ற) திருப்புகழ்.

பறைதிமிலை . . . . . . கரைய :—

ஆவி போனவுடன் பற்பல பறைவாத்தியங்களுடன் ஈமதேசங் கொண்டுபோய் சுடுவர். இப்பறை வாத்தியங்களை ஒருவர் இறந்தவுடன் மூன்று முறை முழக்குவர்.

சென்றே யெறிப வொருகால் சிறுவரை
நின்றே யெறிப பறையினை — நன்றேகாண்
முக்காலைக் கொட்டினுள் முடிததீக் கொண்டெழுவர்
செத்தாரைச் சாவார் சுமந்து"

இவ்வளவு அற்பகாலத்திலழியும் நிலையற்றவாழ்வைப் பெரிதென் றெண்ணி மதிமயங்கி, இறந்து படுவோரைக்கண்டும் தெளிவடையாது மணம்புரிந்துகொண்டு சுகம் உண்டு உண்டு உண்டு என்னும் சிற்றறிவுடையார்க்கு அறிவைப் புகட்டுவதுபோல் ஒலிக்கிறது பறை.

கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப்
பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டு—மணங்கொண்டீண்
டுண்டுண்டுண் டென்னு முணாவினாற் சாற்றுமே
டொண்டொண்டொண் டென்னும் பறை.
—நாலடியார்.

எமது பொருளெனு மருளையின்றி :—

செல்வமானது நீர்மேற் குமிழிபோல் நிலையற்றதாதலால் அதனை உள்ளபோதே அறவழியிற் செலவழித்தல்வேண்டும். செல்வம் வந்தபோது அதன் நிலையாமையை யுணர்தல்வேண்டும். அருமைப் பத்தினியானவள் அருகிலிருந்து அறுசுவையுண்டிகளை ஊட்ட, அதனை மறுகவளம் வேண்டாவென்னும் பெருஞ் செல்வராயிருந்தோரும் ஏழைகளாய் ஓரிடத்தில் போய் கூழையிரப்பர் என்று சொன்னால் செல்வம் நிலையுடையதென்று எண்ணற்பாலதோ? அநேக செல்வர்கள் தானும் உண்ணாது பிறருக்கும் உதவிசெய்யாது பணங்காக்கும்

பூதம்போல் வறிதே யழிவர்; என்னே பேதமை? "நம்மைக்காட்டி லும் அறிவும் ஆற்றலும் உடையவர்களெல்லாம் ஏழையாயிருக்கிறார்களே? நமக்குமட்டும் செல்வம் உண்டானதற்குக் காரணமென்ன? "கொடுத்துவைத்த புண்ணியவான்" என்கிறார்களே? எப்போது கொடுத்துவைத்தோம்? முந்தின பிறவியில் ஏழைகளுக்குக் கொடுத்து வைத்தோம்; அதன் புண்ணியத்தால் இப்போது பெருஞ்செல்வராய்ப் பிறக்கிறோம்; இப்போதும் கொடுத்துவைத்தால்தானே இனி வரும் பிறவியிலும் சுகமே வாழ்வோம்; நாம் எந்தப்பொருளை ஏழைக்குத் தருகிறோமோ அதுதான் நம்முடைய பொருள்; எவ்வளவு பொருளை அறவழியில் செலவழிக்கிறோமோ அவ்வளவும் மறுமைக்கு வந்து துணைசெய்யும்" என்று ஒவ்வொருவரும் தனியே யிருந்து சிறிது நேரம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பிறக்கும்பொழுது கொண்டுவந்ததில்லை, இறக்கும்பொழுது கொண்டுபோகிறதுமில்லை எனவே இடையில்வந்த பொருள்; அது சிவபெருமானால் கொடுக்கப்பட்டது; அதனை அரன்பணியிலும் அடியார் பணியிலும் செலவழித்தல் வேண்டும். அங்ஙனஞ் செலவழிக்காது காவல்புரிந்துகொண்டிருந்தால் செல்வம் விரைவிலழியும். தேனீயானது மிகவும் துன்புற்று அலைந்து சிறிதுசிறிதாகத் தேனைச் சேர்த்துவைத்துத் தானும் முண்ணாமல் பிறருக்கும் வழங்காமல் காத்துக்கொண்டிருக்கிறது; பின்னர் என்ன ஆகிறது? பிறரால் அத்தேன் கவரப்பட்டு தேனீ வீணே வருந்தியழிகிறது. அதுபோல் அறஞ்செய்யாதான் செல்வமழியுமென்றுணர்க.

உடாஅது முண்ணாதுந் தம்முடம்பு செற்றுங்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கொடாஅது
வைத்தீட்டினா ரிழப்பர் வான்றோய் மலைநாட
உய்த்தீட்டுந் தேனீக் கரி.

—நாலடியார்.

"சுழித்தோடு மாற்றிற் பெருக்கானது செல்வம்"
"தேரிற் கரிற் பரியிற் றிரிபவர் செல்வ மெல்லாம்
நீரிற பொரியென் றரியாத பாவி நெடு நெஞ்சமே"
"நில்லாது செல்வம் பார்க்குமிடத் துந்தமின்போலு மென்பர்."

—அலங்காரம்.

குன்றிப்பிளவளவு தினையளவு பங்கிட்டு :—

பெருந் தருமங்களைப் புரிவதற்குப் போதிய செல்வமில்லாதோ ரும் தமது தகுதிக்குத்தக்கவாறு சிறிதாவது அறம்புரிதல்வேண்டும். இதனை வலியுறுத்துதற்காகவே "இயல்வது கரவேல்" என்ற அமுத மொழி யெழுந்தது.

ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும் வாயெல்லாஞ் செயல்

—பொய்யாமொழி.

ஒவ்வொரு நாளும் நமது வருவாயில் ஒரு சிறிதாவது அறத்திற செலவழிந்ததா என்று இரவிற்படுக்கும்போது சிந்தித்தல்வேண்டும்.

"தவிடி னோர்ப்பத மேனினு மேற்பவா
தாழா தீயேன்"

—(கவடுகோதசெழு) திருப்புகழ்.

"வறிஞர்க்கென்றும் நொய்யிற்பிள வளவேனும் பகிர்மின்கள்"

—அலங்காரம்.

"சிறுமிக்குமர நிகர்வீர் பகரச் சிதையுயிர்த்துச்
சிறுமிக்குமர சரணமென்னீ ருய்வீர"

—அந்தாதி.

(இதன் பொருள்:—சிறு - சிறிதான, உமிக்கும் - குற்றுமியை யாயினும், பகிரமர நிகர்வீர - பிறர்க்கிட்டுண்ண மனங்கூடாமல் மரம் போன்றிருப்பவரே! சிதை - அழிந்துபோவதும், உயிர் - பிராண னுக்கு, துச்சில் - ஒதுக்கிடமுமாகிய இவ்வுடலின்கண், துமி - ஒரு தும்மலுண்டாகுங்காலையினும், குமர - குமரனே, சரணம் - உனக் கடைக்கலம், என்னீர் - என்று சொல்வீர், உய்வீர் - பிழைப்பீர்கள்)

இன்றைக்கு அன்றைக்கு என நாடாது இடுக :—

அறிஞர் அறமொழியைக் கேட்பதனாலும், அறிவுநூல்களைப் படிப்பதாலும், அறஞ்செய்யவேண்டுமென்ற எண்ணம் உண்டாகும். அங்ஙனம் உண்டாயின் உடனே அறத்தைச்செய்யவேண்டும். இன்று புரிவோம், நாளை புரிவோம் என்றிருத்தல் கூடாது. ஏனெ னில் மறுகணம் இருப்போம் என்பது என்ன நிச்சயம்? யாம் இளை யம், முதுமையில் அறம்புரிவோமென்னில் இளமையில் அழிதலுங் கண்கூடு முற்றிய கனி யுதிர்வதோடு முதிராத பிஞ்சுகளும் உதிர்ந்து வீழ்வதைக் காண்கின்றோமல்லவா? ஆதலால் யாக்கைநிலையாமையை

யுணர்ந்து அறம்புரியவேண்டுமென்ற எண்ணம் உண்டானபோதே விரைந்து தருமஞ்செய் என்றனர்.

அன்றறிவா மென்னு தறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை

—முப்பானூல.

இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் — றெண்ணி
யொருவுமின தீயவை யொல்லும் வகையான
மருவுமின மாண்டா ரறம்.

மற்றறிவா நல்வினை யாமிளைய மென்னாது
கைத்துண்டாம் போதே கரவா தறஞ்செய்மின
முற்றியிருந்த கனியொழியத் தீ வளியால்
நற்கா யுதிர்தலு முண்டு.

—நாலடியார்.

டுடுடுடுடு . . எனவகலு நெறிகருதி நெஞ்சத்தஞ்சிப் பகிராதோ :—

*ஆன்றோர் அறமொழிகள், அறிவுநூல்கள் இவைகளைக்கொண்டு யாக்கை நிலையாமை செல்வநிலையாமைகளை யுணரவில்லையெனின், தினந்தோறும் இறந்தவரை பறையொலியுடன் கொண்டுபோவதைக் கண்டாவது நெஞ்சம் அஞ்சவேண்டாவோ? இறந்தோரை யலங் கரித்து அழுகையொலியுடன் ஈமதேசத்திற்குக் கொண்டுபோகப் பார்க்கிறோமல்லவா? அதைக்கண்டும் ஆசையில் அழுந்தலாமா? நாம் நெடுநாளைக்கிருப்போமென்று எண்ணுவது எவ்வளவு மதியீனம்? சற்று சிந்தியுங்கள். நன்கு எண்ணிப்பார்த்து மனம் பதைக்கவேண் டும்; "அந்தோ! இதுகாறும் அறஞ்செய்யா தொழிந்தோமே? நாமும் இப்படி ஒருநாளைக்கு இறப்போமல்லவா? இத்துணைச் செல் வத்தையும் விட்டுப்போய்விடுவோமே? நமக்கு இப்போதிருக்கிற பெயரையொழித்து பிணம் என்ற பெயரிட்டு பறையொலியுடன் கொண்டுபோய் தீக்கிரையாக்குவரே? அதற்குள் விரைந்து தருமஞ் செய்து இகபர சௌபாக்கியத்தைப் பெறவேண்டுமென்று" நினைத்து நினைத்து நெஞ்சம் அஞ்சிப் பகிர்ந்தளிக்கவேண்டும்.*

குமுதபதி . . . . . பரதகுரு :—

*சிவபெருமானது திருநடனத்தின் பெருமை: இதன்வரலாற்றை திருப்புகழமிர்தம் முதற்பாகம் 264-ம் பக்கத்திற்காண்க.*

திரளுமணிதரள . . . எறிதிரை :—

செந்திலம்பதி கடற்கரையில் கண்கவருங் கவினுடையதாகத் திகழ்வதால் ஆங்குள்ள தென்னைமரங்கள்மீது தங்கிப்பரளுமாறு கடலலைகள் மிக உயர்ந்தெழுந்து முத்துக்களைக் கொழிக்கிறது.

"ஒருகோடி முத்தம் தெள்ளிக் கொழிக்குங்கடற்
சேந்தில் மேவிய சேவகனே"

—அலங்காரம்.

## கருத்துரை.

ஆனந்தக்கூத்தயரும் அரனுர் வந்திக்கும் குருநாதரே! செந்தில் மேவிய கந்தப்பெருமாளே! கூற்றுவன் ஓலைவர, அடியேனுயிர் எமபுரமேக இங்கு பறை முதலிய ஒலிகளுடன் எனதுடலை ஈமதேயத்திற்குக் கொண்டுபோகும் மரணயாத்திரையை எண்ணிப்பயந்து பகிர்ந்தளிக்கமாட்டேனே?

---

## தந்தை தாய்ப் பேண்.

தாய் தந்தைகளைப் பேணிக் காப்பாற்றுவது மைந்தரது கடமையாம்; சிசிலி என்னுந் தீவில் எட்ந என்கின்ற எரிமலை ஒன்றுளது; சில சமயங்களில் அதன் சிகரங்களிலிருந்து அக்கினி பொங்கி பல திசைகளிலும் வீசுவது வழக்கம். ஒருநாள் அம்மலை மிகவும் நெருப்பைக் கக்கிற்று; அப்போது அம்மலையின் சாரலிலுள்ள மக்கள் அனைவரும் தங்கள் தங்கள் பொருள்களில் விலையேறப்பெற்றவைகளை எடுத்துக்கொண்டு உயிர்தப்பி ஓடினுர்கள், அவர்களுள் செல்வம் மிகுந்த இரு பிள்ளைகள் உயர்ந்த நவரத்தினங்களை யெடுத்துக்கொண்டு ஓடினுர்கள்; அவர்களுடைய பிதாமாதாக்கள் வயது முதிர்ந்தவர்களானபடியால் நடக்கமுடியாது, அவர்களுக்குப்பின்னே மெல்லநடந்து போனுர்கள். அதுகண்ட பிள்ளைகள் இருவரும் "நம்மைப் பெற்றுவளர்த்த தாய் தந்தைகளைக்காட்டிலும் இரத்தினமணிகள் உயர்ந்தனவா? நம்முடைய ஆஸ்திகள் போனுலும் போகட்டும், தாய தந்தைகளைக் காப்பாற்றுவதே சிறந்த கடமை' என்றெண்ணி, விலையுயர்ந்த நவரத்தினங்களை எறிந்துவிட்டு தாய்தந்தைகளைத் தூக்கிக்கொண்டு அந்த நெருப்புக்கு ஒருவாறு தப்பி ஓடிச் சென்று நெடுந்தூரம் ஓடிச்சென்று நல்லிடத்திற்குப்போய் தாய்தந்தைகளைக் காப்பாற்றிவந்தார்கள்.

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

# ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

(173-ம் பக்கத் தொடர்ச்சி.)

इहायाहि वत्सेति हस्तान्प्रसार्या
ह्वयत्यादराच्छङ्करे मातुरङ्कात् ।
समुत्पत्यतातं श्रियन्तं कुमारम्
अराश्लिष्टगात्रम् भजे वालमूर्तिं ॥

(18) இஹா யாஹி வத்ஸேதி ஹஸ்தான் ப்ரஸார்யா
ஹ்வயத்யா3தராச் சங்கரே மாதுரங்காத் ।
ஸமுத்பத்யதாதம் ஸ்ரயந்தம் குமாரம்
ஹராஸ்லிஷ்ட3காத்ரம் 4பஜே 3பாலமூர்த்திம் ॥

## பதவுரை.

| | |
|---|---|
| ஹே வத்ஸா ! | - ஓ குழந்தாய், |
| இஹ | - இங்கு, |
| ஆயாஹி | - வா, |
| இதி | - என்று, |
| ஆதராத் | - அன்போடு, |
| ஹஸ்தான்ப்ரஸார்ய | - கைகளை நீட்டி, |
| சங்கரே ஆஹ்வயதி | - பரமசிவக்கடவுள் அழைக்குங்காலத்தில், |
| மாது: அங்காத் ஸமுத்பத்ய | - தாயின் மடியிலிருந்து துள்ளிக்குதித்து, |
| தாதம் ஸ்ரயந்தம் | - தந்தையிடம் செல்கின்றவரும், |
| ஹராஸ்லிஷ்ட காத்ரம் | - பரமசிவனாலணைக்கப்பட்ட திருமேனியையுடையவரும், |
| பாலமூர்த்திம் | - குழந்தைப்பருவத்தினருமான, |
| குமாரம் பஜே | - குமாரக்கடவுளை வழிபடுகின்றேன். |

## பொழிப்புரை.

பரமசிவக்கடவுள் மிக ஆதரவோடு குழந்தாய்! இங்கு வா! என்று கைகளை நீட்டி அழைக்குடபோது தாயின்மடியிலிருந்து துள்ளி எழுந்து தந்தையையடைந்து தந்தையால் அணைத்துக்கொள்ளப்படும் தனமையையுடைய இளமபருவத்தினராகிய குமாரக்கடவுளை நான் சரணமாக அடைகினறேன் இதனுல் அன்புடன் வழிபடும் அடியவர்களை எளிதில் அநுக்கிரகிக்கும் குமாரக்கடவுளின் கருணைத்திறம் விளக்கப்பட்டது.

कुमारेशसूनोगुहस्कन्दसेना-
पते शक्तिपाणेमयूराधिरूढ ।
पुलिन्दात्मजाकान्तभक्तार्ति हारिन्
प्रभो तारकारे सदा रक्षमां त्वम् ॥

(19) குமாரேஸ ஸூனோ கு3ஹஸ்கந்த3 ஸேனா
பதே ஸக்தி பாணே மயூராதி4 ரூட4 ।
புளிந்3தாத்மஜாகாந்த ப4க்தார்த்தி ஹாரின்
ப்4ரபோ தாரகாரே ஸ3தா ரக்ஷ மாம்த்வம் ॥

## பதவுரை.

| | |
|---|---|
| குமார! | - குமாரககடவுளே! |
| ஈஸஸூனோ | - பரமசிவன் புததிரனே! |
| குஹ! | - குஹனே! |
| ஸ்கந்த! | - கநதப்பெருமானே! |
| ஸேனாபதே! | - தேவர்களின் சைனியங்களுக்குத் தலைவனே! |
| சகதிபாணே | - வேற்படையைத தாங்கினவனே! |
| மயூராதிரூட! | - மயிலவாகனனே! |
| புளிந்தாதமஜாகாந்த! | - வல்லீபதியே! |
| பக்தார்ததிஹாரின்! | - அன்பர்களின துன்பததை தீர்ப்பவனே? |
| ப்ரபோ! | - பிரபுவே!, |
| தாரகாரே! | - தாரகாசுரனைச் சங்கரிததவனே! |
| த்வம் | - தேவரீர், |
| மாம | - என்னை, |
| ஸதா | - எப்போதும், |
| ரக்ஷ | - காப்பாற்றவேண்டும்: |

இத்தகைய விசேஷகுணங்களால் உலகத்தைக் காக்குந்திறமை குமாரக்கடவுளுக்கே யுரித்தானதாகையால் நன்மையை விரும்பும் நல்லோர்களால் வழிபடத்தக்கவர் முருகக்கடவுளே என்று தெரிவிக்கப்பட்டது.

प्रसान्देन्द्रिये नष्ट संज्ञे विचेष्टे
कपोत्गारिवक्त्रे भयोत्कम्पि गात्रे ।
प्रयाणोन्मुखे मय्यनाथे तदानीम्
द्रुतं मे दयालो भवाग्रे गुहत्वम् ॥

(20) ப்ரசாந்தேந்த்$^3$ரியே நஷ்டஸம்ஜ்ஞேவிசேஷ்டே
கபோ$^2$த$^3$கா$^3$ரி வக்த்ரே ப$^4$யோத்கம்பி கா$^3$த்ரே ।
ப்ரயாணோன்முகே மய்யநாதே$^2$ த$^3$தானீம்
த்$^3$ருதம்மே த$^3$யாளோ ! பவாக்ரே கு$^3$ஹத்வம் ॥

## பதவுரை.

| | |
|---|---|
| ஹே தயாளோ: குஹ ! | - கருணைமிகுந்த குஹகடவுளே ! |
| மயிப்ரசாந்தேந்த்ரியே நஷ்டஸம்ஜ்ஞே | - நான் இந்திரியங்களெல்லாம் அடங்கி நினைவுகெட்டு, |
| கபோத்காரி வக்த்ரே பயோத்கம்பிகாத்ரே | - கோழைகள் வெளிப்படுகின்ற முகத்தையும் பயத்தினால் நடுங்குகின்ற உடலையும் உடையவனாய், |
| ப்ரயாணோன்முகே அநாதே | - மரணவேளை நெருங்கிக்காப்பாற்ற ஆளில்லாமல் எப்போது ஆவேனோ, |
| ததானீம் | - அப்போது, |
| த்வம் | - தேவரீர், |
| த்ருதம்மே அக்ரேபவ | - விரைவில் எனது எதிரில் எழுந்தருள வேண்டும். |

## பொழிப்புரை.

கருணைக் கடலாகிய குஹப்பெருமானே அடியேன் ஐம்புலன்களும் ஒடுங்கி அறிவிழந்து வாயினின்றும் கோழைகள் வெளிப்பட அச்சத்தால் அங்கம் நடுங்க மரணம் நெருங்கி பரிதவிக்கும்போது தேவரீர் விரைவாகவே எனது எதிரில் எழுந்தருளிக் காட்சியளித்துக் காப்பாற்றவேண்டும். (தொடரும்.)

ஓம் குஹாயநம:

# கந்தர் திருவிளையாடல்

## திருவவதாரம்.

(130-வது பக்கம் தொடர்ச்சி)

பார்வதியம்மையார் திருமண நிகழ்ச்சிக்குப் பலநாட்களுக்குப் பின் திருமால் திசைமுகன் தேவர்கோமான் திக்குப்பாலகர்கள் ஏனைய வானோர் முனிவர் முதலியோர் மேருகிரியிற்கூடி சூரபன்மனால் வருந்திக்கூறுவர். "சிவபெருமான் உலகங்களை அவுணர்க்கீந்து யோகி போலிருந்துகொண்டு, நமக்குத் துன்பத்தை விளைத்தார். நாம் போய் பிரார்த்தித்தாலும் திருவுளமிரங்கி உமாதேவியைத் திருமணஞ் செய்தார். செய்தும் ஓர் திருக்குமாரரைப்பெற்று நம்மைக் காத்தருளாது வாளாவிருப்பதென்னை? விருப்பு வெறுப்பின்றி யாவருக்கும் ஒரு தன்மையாய் அவரவர் வினைக்குத்தக்கபடி பயன்களை நல்கும் சிவமூர்த்தியை வெறுத்துரைத்தல் குற்றம்; நமது விதியை நோவவேண்டும்; கைலாயஞ்சென்று நமது குறையை முறையிடுவோம்" என்றார்கள். அப்பொழுது பிரமதேவர் "சிவபெருமானுடைய செய்கையை அறிந்தபின் போதல்வேண்டும்; ஒரு தூதனால் அறிவோம்" என்று, வாயுதேவனை நோக்கி, "மைந்த! நீ திருக்கைலாசமலையை யடைந்து சிவபெருமானுடைய செய்கையை யறிந்துகொண்டு வருவாயாக" என்றார். அதுகேட்ட வாயுதேவன் "மன்மதனை யெரித்த சிவபெருமான்முன் செல்லுதல அரிது, செல்லிற் றீமையேவிளையும்; இது என்னால் முடிவதன்று; என் மனம் அஞ்சுகின்றது" என்றனன். பிரமதேவர் வாயுவை நோக்கி "அஞ்சாதே! வலிமையுடன் எங்கும் உலாவும் இயல்பினையுடைய உன்னையன்றி இதுசெய்ய வல்லார்யாவர்? உற்றவிடத்து உதவிசெய்வோரும், வரையாது கொடுப்போரும், தவஞ்செய்வோரும், போர்செய்யும் வீரரும் பிறிதொரு பொருளையும் விரும்பார்; வருத்தமும் பாரார்; உயிர்நீங்க வரினும் நன்றென்று மகிழ்வர்; ஆதலால் எமக்கு உதவிசெய்யும்பொருட்டு நீ செல்லக் கடவாய்" என்றார்.

வாயுதேவன் உடன்பட்டு திருக்கயிலையை யடைந்து, கங்கை தோய்ந்து, சோலைமலர் நறுமணம் அளாவி, தென்றலாய் மெல்ல அசைந்து திருக்கோயிலினுட் செல்வானாயினான். வாயிலில் வீற்றிருக்கும் நந்திதேவர் கண்டு உரப்பினார். இடியேறுண்ட நாகம்போல் வாயுதேவன நடுங்கி வலியற்று வீழ்ந்தான். பின் தெளிவுற்று பண்டைய வுருவத்தைக்கொண்டு திருநந்திதேவரை வணங்கி, "அருட்பெருங்கடலே! மாலயனாதி வானோர்கள் சிவபெருமானைத்தெரிசித்துத் தமது குறையை முறையிட நினைத்து, அவர் செய்கையை அறிந்து வருமாறு என்னை அனுப்பினர்; யான் மறுத்தும் அவர்கள் அடுத்தடுத் துரைத்ததால் வந்தேன; தேவரீர்பால் விடைபெறாதுசென்றதற்கு மன்னிக்கவேண்டும்; சூரபன்மனால் துன்புற்று அறிவுகுன்றப் பெற்றேன்; பொறுத்தருள்க" என்று தொழுது வேண்டிநின்றான். நந்தியங்கடவுள சினந்தணிந்து "உனக்கு உயிர்ப்பிச்சை யளித்தோம்; விரைவில் மீண்டுபோவாய்" எனன; வாயுதேவன் மேருமலை சென்று நான்முகனாதியோர்க்கு நடந்த வரலாற்றை நவின்றான்.

அமரர்கள அனைவரும் துனபமுற்று, மேருமலையினின்றும் புறப்பட்டுக் கைலையை யடைந்து, திருநந்திதேவரைப்பணிந்து "எமது வரவை இறைவனுக்குத் தெரிவித்தருளவேணடும்" என்ன, நந்திதேவர் சிவமூர்த்தியின்பால் அறிவிக்க, பரமசிவன் "அழைத்து வருதி' என்று பணிக்க, நந்திதேவர் அனைவரையும் அழைத்துச் சென்றனா. திருமால் முதலியோர் பரமேசனைப் பலகாலுமபணிந்து தமது குறைகளைக்கூறி முறையிட்டனர். சிவபெருமான் தேவர்கள் மீது திருவருள்நோக்கஞ்செய்து "நீங்கள் மிக வருந்தினீர்கள, உங்களுக்கு வேண்டும் வரம் யாது? கூறுதிர், தருதும்" என்று திருவாய் மலர்ந்தருளினார். தேவர்கள் "எம்பெருமானே! அடியேங்களெல்லாம் இந்நாள்காறும் சூரன்முதலிய அவுணர்களால் வருந்ினோம; அவ்வருத்தம் நீங்கி முன்னையாக்கத்தையடையும்பொருட்டு ஒரு வரம் வேண்டுகின்றோம்; பரமகருணாநிதியே! அகிலாண்டங்களையுமீன்ற அம்பிகையை நீர் திருமணஞ்செய்தமை, தீவினைக்கடலினழுந்திய சிறியேங்களை ஆளுதற்கு ஒரேதுக்காட்டுதற்கன்றி அவரிடமாக ஒரு திருக்குமாரரைப் பெறுதறகன்று; ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஒப்பும் ஏதமும் வரவும் போக்கும் இன்பமும் துன்புமின்றி வேதமுங்கடந்துநின்ற விமலனே! ஒரு திருக்குமாரரை உமக்கொப்பாக உம்மிடத்தினின்றுந் தோற்றுவித்தருளுக" என்று விண்ணப்பஞ்செய்தார்கள்.

ஆர்த்திவன்னாராகிய அரனார் "நீங்கள் வருந்தாதொழிமின், புதல்வனைத் தருவேம்" என்று திருவாய்மலர்ந்து, ஞானிகளால் சிந்திக்கப்படுந் தனது பழமையாகிய ஆறு திருமுகங்களையுங்கொண்டு, அத்திருமுகங்களிலுள்ள நெற்றிக்கண்கள்தோறும் ஒவ்வோர் அக்கினிப்பொறியைத் தோற்றுவித்தருளினார். அவ் வாறுபொறிகளும் அரியயனாதி அண்டர்கள் யாவருஞ் சிறிதும் அணுகலாற்றாத மிக்க வெம்மையை உடையனவாகி, உலகமெங்கும் பரந்தன. அப்பொழுது வாயுக்கள் உலைந்து ஓய்ந்தன; கடல்கள் வற்றின, வடவாமுகாக்கினியுந் தன் செருக்கு நீங்கிற்று; பூமி பிளந்தது; மலைகள் யாவும் நெக்குவிட்டன; அட்ட நாகங்களும் நௌிந்து நீங்கின; அட்ட திக்கயங்களும் அழுது தியங்கின; உயிர்களெல்லாம் நடுங்கின; ஆயினும் அவ்வக்கினிப்பொறிகள், பெருங்கருணை செயயும்வண்ணம் பிறந்தனவாதலால், ஓருயிரையும் நாசஞ் செய்தில. எவர்களையும் எவைகளையும் அஞ்சுமாறு செய்தன. அப்பொறிகளின் வெம்மையைக்கண்டு, அரனார் அருகில் எழுந்தருளியிருந்த உமாதேவியார் வேர்த்துத் திருவுளங்கலங்கி, திருவடியிலுள்ள சிலம்புகள் புலம்புமாறு திருக்கோயிலினுள்ளே ஓடினார். விஷ்ணுமுதலாயினோர்கள் வெருவி நடுநடுங்கி ஒருவர் போமிடம் ஒருவருணராய் ஓடி ஒளிந்தார்கள். கப்பலின் மீதமர்ந்திருந்த காகங்கள், துரத்தப்பட்டாலும் மீளவும் அக்கப்பலையே வந்தடுப்பதுபோல் தேவர்கள் யாவருந் திரண்டு சிவமூர்த்தியையடைந்து ஓவென்று முறையிட்டு, எந்தையே! வெந்திறல் அவுணரை மாய்ப்பதற்கு ஓர் மைந்தனையருளுகென வேண்டினேம; முடிவில்லாத வெப்பத்தையுடைய அக்கினியை வழங்கினீர்; நாங்கள் உய்வது எவ்வாறு? முன்னொருநாள் மலைவளர் மங்கையின் கரத்திற்றோன்றிய கங்கை எவ்வுலகங்களையும் அழிக்கப்பரந்ததுபோல் தமது நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றிய நெருப்புப்பொறிகள் உலகெலாம் பரந்தன; ஐயனே! அவற்றை மாற்றிடாயெனில் இன்னும் ஒரு கணத்தில் உலகெலாம் அழியும்; அவற்றின் வெப்பந்தாங்காது அஞ்சியோடினேம்; மீளவும் உமது திருவடியே அடைக்கலமாக வந்துளோம்; உம்மையன்றி எமக்கு வேறுதுணை யார்? மண்ணும் விண்ணுமாகப்பரந்துள இப்பெரிய அக்கினியைத்தணித்து எமது குறையைத்தவிர்த்தருளல்வேண்டும்" என்று வேண்டினார்கள். சிவபெருமான் "அஞசன்மின்" என்று அருள்புரிந்து ஐம்முகத்தைமறைத்து ஒருமுகத்தோடு எழுந்தருளியிருந்து, தம்முடைய நுதற்கண்களினின்

றுந்தோன்றி உலகமெங்கும் பரந்த அக்கினிப்பொறிகள் தமது திருமுன் வரும்வண்ணம் திருவுள் செய்ய, அப்பெரும் அக்கினி முன்போல ஆறுபொறிகளாகப் பெருமான்முன் வந்தன. அதுகண்டு சிவபெருமான் வாயுதேவனையும் அக்கினிதேவனையும் நோக்கி, "நீங்களிருவிரும் இத்தழற்பொறிகளைத் தாங்கிக்கொண்டுபோய் கங்கையில் விடக்கடவீர்கள்" என்று பணித்தருளினார். வாயுதேவனும் அக்கினிதேவனும் கேட்டு நடுநடுங்கி அஞ்சி, முமமுறைவணங்கி, தேவதேவ! இவைகளை அடியேங்கள் தாங்கவல்லமா? உலகத்தைச் சங்கரிக்குந் தேவரீரது நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றிய இவ்வக்கினியுடபிரம விட்டுணுக்களும ஒரு கணப்பொழுதாயினும் தாங்க வல்லவர்களா? முற்காலத்திற்றோன்றிய ஆலகாலம்போலப்படர்ந்த இத்தழலைக்கண்டு வருந்தி ஓடினேம், இவற்றை அணுகவும் அஞ்சுகிறேம்; இவற்றை நாங்கள் சிரமேற்றாங்கிக்கொண்டு செல்லுதல் கூடுமா? இவ்வக்கினியை நினைப்பினும் நெஞ்சம சுடுகிறது, உடல் வியர்க்கின்றது; நாங்கள் எவ்வாறு தாங்குவோம்?" என்று கூறினார்கள். சிவபெருமான் "இவற்றைத் தாங்கும் ஆற்றலை நுமக்களித்தோம்" என்று அருளபுரிய, வாயுவும அக்கினியும இயைந்து பணிந்தார்கள். மாலயனாதிவானவர் "எமது இடுக்கண் இன்றே நீங்கியது" என்று உடல் பூரித்தார்கள். கண்ணுதற்பரமன் அவர்களை நோக்கி, "இத்தழற்பிழம்பு சரவணப்பொய்கையில் சேர்ந்து ஒரு குமாரனாய் வளர்ந்து, சூராதியவுணர்களை யழித்து உமக்குத் திருவருளபுரியும, செல்லுகிர்" என்று திருவாய்மலர்ந்தருளினார். தேவர்கள் "உய்ந்தனம்; உய்ந்தனம்; இனி அடியேங்களுக்கு ஓர் குறையுமில்லை" என்று கூறி சிவபெருமானை வணங்கி விடைபெற்று நீங்கினார்கள்.

வாயுதேவன் வரைவில்லியை அக்கினிதேவனுடன் வணங்கி, அவருடைய திருவருளாலே அழற்பொறிகள் ஆறையும் சென்னிமேற்றாங்கிக்கொண்டு, திருக்கோயிலை நீங்கிச்செல்ல, அதனைப் பிரம விட்டுணுமுதலிய தேவர்கள் பெருமகிழ்ச்சியுடன் கண்டு, "அநாதிமலமுத்தராம் ஐம்முகச்சிவனார் நெற்றிக்கண்ணினின்றும் ஒரு திருக்குமாரரைத் தோற்றுவித்தருளினார்; சூரபன்மன் அழிவதற்கும் நாம் பண்டையின்பத்தை யடைதற்கும இன்னுஞ் சிலநாளிருத்தலால், எம்பெருமான் தம்முடைய திருப்புதல்வரை சரவணப்பொய்கையில் குழந்தையாக வளரும்வண்ணம அருளசெய்தார்; சிவபெருமானது செயலெல்லாந் திருவருளே; இன்றே நங்குறை தீர்ந்தது; இனி அச்சமென்பதில்லை; நாமும் சரவணப்பொய்கைக்குச் செல்வேம்" என்று வாயுதேவனைத் தொடர்ந்து சென்றார்கள். ஒரு நாழிகை செல்ல வாயுதேவன் "இவ்வக்கினியைத் தாங்குதல் அரிது அரிது" என்று புலம்பி, சிவனாரது அருளால் வலிமைபெற்ற அக்கினிதேவனுடைய சென்னியிற் சேர்த்தான். இவ்வாறு மாறி மாறி தாங்கிக்

கொண்டுபோய் கங்கையில் விடுத்தனர். அப்பொறிகளின் வெப்பத்தால் கங்கை சிவனாது சடையில் மறைந்ததுபோல் மறைந்தது. சிவபெருமானருளால் கங்கை அவற்றை சென்னிமேற்றாங்கி ஒரு நாழிகைக்குள் சரவணப்பொய்கையில் விடுத்தனள். மாலயனாதிவானவர்கள் ஆங்கு வந்து விளைவை நாடும் வறியவர்போல் எதிர்நோக்கினார்கள். பிரமன் விண்ணிலும், திருமால் மண்ணிலும், இந்திரன்முதலிய திசைபாலகர்கள் எண்டிசையிலுமாக நின்று காத்தார்கள். கங்கையும் வறக்குமாறு புகுந்த அழற்பொறிகளாலும் இமையமலைச்சாரலிலுள்ள சரவணப்பொய்கையில் புகுதலும், அது சிவபெருமானருளால் வறத்தலின்றி வளம்பெற்றிருந்தது.

அருவமும் உருவமுமாய அநாதியாய் ஒன்றாய் பலவாய்ப் பரப்பிரமமாய் நின்ற சோதிப்பிழம்பே திருமேனியாக கருணைவெள்ளம் பொழியும் ஆறுதிருமுகங்களும், பன்னிரு திருக்கண்களுங்கொண்டு உலகமெல்லாம் உய்யுமவண்ணம் முருகக்கடவுள் திருவவதாரஞ் செய்தருளினார்.

அருவமு முருவுமாகி யநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக் [டே
கருணைகூர் முகங்களாறுஞ் சரங்கள்பன் னிரண்டுங் கொண்
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலக முய்ய.

ஆகாயத்திலே துந்துபிகள் முழங்கின, வேதங்களெல்லாம் ஆர்த்தன, பிரமாவும் திருமாலும் இந்திரனும் பூமழைபெய்து, "அடியேங்களுக்கு அருள்செய்க" என்று துதித்துச் சூழ்ந்தார்கள். ஒருவருக்கும் அமையப்பெறாத இறைவர்க்குள்ள அருட்குணங்கள் ஆறும் ஆறுமுகங்களாய் வந்தனென்ன, சரவணத்தில் வைகும் தனிப்பெருந்தலைவர் ஆவிகட் கருள்புரியுமாறு ஆறுமுகங்கொண்டு வீற்றிருந்தருளினார். வேதங்களின் முடிவாலும் மனத்தாலும் வாக்காலும் அறியொணாது எங்கும் நிறைந்துநின்ற நிருமலராகிய முழுமுதற்கடவுள் மூவிரு முகங்களை யுடையாராய்த் தோன்றி, உயிர்களிடத்துள்ள பேரருளோடும் சரவணப் பொய்கையிலே ஆயிரத்தெட்டு இதழ்களோடுகூடிய செந்தாமரை மலரின்மீது எழுந்தருளியிருந்தார்.

மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினா லளக்கொ ணாமை
னிறைவுடன் யாண்டுமாகி நின்றிடு நிமல மூர்த்தி
அறுமுக வுருவாய்த் தோன்றி யருளொடு சரவணத்தின்
வெறிகமழ் கமலப்போதில் வீற்றிருந் தருளினானே.

(தொடரும்.)

உ

ஓம் குஹாய நம

# கற்பு

(186-ம் பக்கத் தொடர்ச்சி)

இறைவனால் படைக்கப்பட்ட உலகம் பஞ்சபூதங்களின் சேர்க்கையேயாகும். உடம்பு பஞ்சபூதங்களின் பரிணாமமேயாம். இவ்வைம்பெரும் பூதங்களுக்குள் சிறந்தது அக்கினியேயாம். சிறந்த மணி நடுவிலிருப்பதுபோல, அக்கினிபூதம் ஐம்பூதங்களுக்கும் நடுவில் இருந்து திகழ்வதாம். எல்லாவற்றையும் நீறாக்கும் பெருந்திறலுடையது சிவபெருமானுக்கு ஒருவகையில் கண்ணென்று சொல்லப்படும் பெருமிதமுடையது. இருளைநீக்கி உலகத்திற்கு இன்பத்தை நல்குவது. கரையின்றி நிறைந்த கடலை நிலைமீறாது அடக்கிக்கொண்டிருப்பது இவ்வக்கினியேயாம். உடம்பிலும் இவ்வக்கினி தணிந்துவிட்டால் கைகால்கள் குளிர்ந்து ஆவிநீங்குகிறது. எல்லா வுலகங்களையும் முடிவில் எரிக்கும் பெருவலியுடையது.

இத்தகைய அக்கினியைச் சுடுகின்ற அக்கினி ஒன்றுளது; அதன் பெருமையை அளக்கவல்லார் யாவர்? தீயைச்சுடுகின்ற தீ எது? என்று அன்பர்கள் வியப்புறலாம்; கற்புத்தீயேயாம். கற்புடையவளைக்கண்டு கனலும் அஞ்சுகிறது; தீயினும் வெப்பமுடையது கற்பு; தூரத்திலிருந்த வேடுவனை எரித்த தமயந்தியின் கற்புத்தீயை அறியாதாரும் உண்டோ? பெண்மணிகள் அக்கற்பைக் காப்பாற்றவேண்டும்; உயிரினுஞ்சிறந்ததாகக் கற்பைப்பேணவேண்டும், அடியில் வரும் வரலாற்றை சகோதரிகள் உய்த்துணர்க.

சோழவள நாட்டின் தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினத்தில் சாதுவன் என்னும் வணிகன் ஒருவன் இருந்தான். அருநிதிமிக்கப் பெருமிதமுடையவன். அந்நகரிலேயே நற்குடி தோன்றிய சற்குணவதியாம் ஆதிரை யென்னும் மாதரசை வாழ்க்கைத்துணைவியாகக் கொண்டு இல்வாழ்க்கையென்னும் நல்வாழ்க்கையை நடத்திவந்தான்.

ஆதிரையோடு ஈராண்டு சுகமே இன்புற்றிருந்தனன். ஒருநாள் சாதுவன் அந்நகரில் நடந்த நாடகத்திற்குச் சென்றான். அதில்

நடித்த நாடகமாதின் கண்களைக் கவரும கட்டழகில் மயங்கினான். அவளது ஆடலைக்கண்டும பாடலைக்கேட்டும பரவசமடைந்து அவள் மீது மையல்கொண்ட சாதுவன் நாடகமுடிந்தபின் வீடுசென்று கண்ணுறங்காது, அவளையே நினைந்து நினைந்து நெஞ்சம புண்ணாகி, விடிந்ததும் அவ்விலைமகள் வீடுசென்று அவள் மாயவலைப்பட்டு அவள் வீடே சுவர்க்கவாசமென மகிழ்ந்திருந்தான் (நாடகம் பார்ப்பதின் தீமையை உற்று நோக்குங்கள்). சாதுவன் தனது தருமபத்தினியை மறந்து கணிகையுடன் களித்து வாழும் நாளில் முன்னோர் தேடி வைத்த நிதிகளையெல்லாம இழந்தான். பொன் பறிப்பதில் பரத்தையர் மிகவும் வல்லுனரல்லவா? அக்கணிகை பொருள முழுவதையும் பறித்துக்கொண்டு சாதுவன் கை வறண்டவுடனே அவனை விரட்டி விட்டனள். விளக்கொளியும வேசையர நட்பும் ஒன்று, விளக்கொளி நெய்யற்றவுடனே ஒழியும்; வேசையர் நட்பு கையற்றவுடனே ஒழியும் சாதுவனை விரட்டிய வேசி வேறொரு தனவந்தனை நேசித்தாள். சாதுவன் உள்ள உணவும உடுக்க உடையும் இன்றி துன்பவாரிதியில் வாழ்ந்தான கற்பரசியாகிய ஆதிரையை நினைந்து வருந்தினான்; அவளுக்குத தானிழைத்த தீங்கையுன்னி நெடுமூச் செறிந்தான்; அவளைக்காண நாணித் தனது இல்லத்திற்கும் சென்றானில்லை.

இவ்வாறிருக்கையில் வங்கநாட்டினின்றும் சிலவணிகர் பண்டமாறும்பொருட்டுக் காவிரிப்பூமபட்டினம் வந்திருந்தார்கள். அவர்கள் மீண்டும் தமது நாட்டிற்குப் புறப்படும்பொழுது, சாதுவனும் அந்நாட்டிற்குச் செல்ல விரும்பி, அவ்வணிகரிடம தமது கருத்தைத் தெரிவித்து அவர்கள் சம்மதிபெற்று அவர்களுடன் மரக்கலமேறிச் சென்றனன். மரக்கலம் கடலில் நெடுந்தூரஞ் சென்றபின், கடுங் காற்றும் இடியுடன் கூடிய பெருமழையும் திடீரென்றுண்டாயின. இரவுவேளையாதலால் இருள்மயமாக மிகவும பயங்கரமாக இருந்தது. கடல் கொந்தளித்தது; மரக்கலம் கவிழ்ந்துவிடும் என்றறிந்த கப்பல் தலைவன அபாயநிலையை அங்குள்ளார்க்கு அறிவித்தான். கப்பலி லிருந்தோர்கள் தமக்கு நேர்ந்த இன்னலையுன்னி வருந்தி இறைவனை நினைந்து கைகூப்பித் தொழுதார்கள். சாதுவன் தனக்கு நேர்ந்த ஆபத்தையும், தனது அருமைப் பத்தினியாகிய ஆதிரைக்குத் தான் புரிந்த தீமையையும், அவளைக்கண்டு தனது குறையைக்கூறுது வந்தத தையும் மாறிமாறி எண்ணி ஏங்கிக் கண்ணீர் பெருக்கி எல்லாம் வல்ல

இறைவனை இரு கரங்களாலும் இறைஞ்சி நின்றான். சிறிது நேரத்தில் கப்பல் கடலில் மூழ்கியது. ஓவென்ற ஒலி கடலொலியை வென்றது. கடலுள் அழுந்திய மக்களிற் பலர் மாண்டனர்; சிலர் இங்குமங்குமாக நீந்தித் தத்தளித்து அங்கு மிதந்திருந்த மரக்கட்டைகளையும் பாய்மரங்களையும் பற்றிக்கொண்டு அலைகளில் மோதி மொத்துண்டு அலக்கணுற்றனர். சிலர் முதலைகட்கும் பெருமீன்களுக்கும் இரையாயினர். சாதுவன் கடலில் மூழ்கியதும் அருகில் மிதந்துகொண்டிருந்த ஒரு பாய்மரத்தைக்கண்டான், அதைப் பற்றி அதன்மீது படுத்துக்கொண்டான். எங்கும் பரந்திருந்த இருளும், கருங்கடலின் பேரொலியும், இடியோசையும், பெருமழையும், கடுங்காற்றின் ஆரவாரிப்பும் ஒருங்குகூடிய அந்நிலையைக்கண்டு யார்தான் கலங்காதிருப்பார்? சாதுவன் தனது அபாயநிலைக்கு உளம் மிகவும் வருந்தி, கற்புக்கணிகலமாகிய தன் காதலியை நினைந்தான்; "மங்கையர்க்கரசியே! அருந்ததியனைய ஆரணங்கே! ஐயோ! நான் உயிரோடிருந்தும் உனக்குத் துன்பமே செய்தேன்; இறந்தும் உனக்குத் துன்பமே செய்யப்போகிறேன்; நாடகம் பார்த்து நாடோடியானேன்; மாதர் மணியாகிய உன்னை வெறுத்து வேசை வலைப்பட்டேன்; வேசையர்வலைப் பட்டார்க்கெல்லாம் இக்கதிதான் என்பது திண்ணமாயுணர்ந்தேன்; அந்தோ! காமதேனுவின் பாலை வெறுத்து கள்ளிப்பாலை விரும்பியுண்டவனைப்போல், கற்பரசியாகிய உன்னை விட்டு கணிகையின் உறவைப்பெற்றேன்; கொடும்பாவியாகிய எனக்கு இத்தண்டனை வேண்டற்பாலதே; பாவியேன் புறப்படும்போது நினது மதிமுகத்தைக்கண்டு ஒரு சொல்லும் சொல்லாமல் வந்தேன்; இனி உன்னைக் காண்பேனோ? உனது இனிய மதுரமொழியைக் கேட்பேனோ? நான் இறந்ததைக்கேட்டு எவ்வாறு வருந்துவையோ? என்னை நினைந்து நெஞ்சம் புண்ணாகுவையோ?" என்று பலவாறு புலம்பி விண்ணீருடன் கண்ணீரையும் பெருக்கி மிதந்துகொண்டு கண்களைமூடி துன்பக்கடலில் மூழ்கினன். பாய்மரம் அலைகளால் தள்ளப்பட்டு ஆதிரையின் நற்றவப்பயனால் பொழுது புலர்ந்ததும் ஒரு மலைநாட்டில் அவனைச் சேர்த்தது.

சாதுவனைப் போலவே மரக்கட்டைகளையும் பாய்மரங்களையும் பற்றினோர் கடலில் மிதந்து மறுநாள் காவிரிப்பூம்பட்டினக்கரையில் ஒதுக்கப்பட்டார்கள். அவர்களைக்காண அந்நகர மக்கள் திரளாகக் கூடினர். இயமனிடமிருந்து தப்பியதுபோல் கடலிலிருந்து தப்பிய

அவர்கள் நிகழ்ந்ததைக் கூறினர். அதைக் கேட்டோர் அனைவரும் அதிசயமும் அநுதாபமும் கொண்டனர். சாதுவனும் கடலில் மூழ்கி மடிந்தானென்ற செய்தி காட்டுத்தீபோல் நகரெங்கும் பரவியது. அதனைக்கேட்ட ஆதிரை இடியேறுண்ட பாந்தள்போல் நடுங்கி "அந்தோ! அருமைக்காதல! அநாதையாக என்னைவிட்டு அகன்றீரோ? உமது பொன்னார்மேனியை இனிக் காணும்நாள் உளதோ? தாங்கள் என்னோடு சொல்லாமலும் போனீரோ? கணவனையே கடவுளாக நினைக்கும் காரிகையார் கணவன் பிரிந்தபின் உயிர்வாழ்வாரோ? தாங்கள் சென்ற வானுலகத்திற்கு யானும் வருகிறேன்" என்று புலம்பி, அப்பொழுதே அந்நகர மயானத்தில் தீ வளர்த்து அத்திக் குழியில் இறங்கி உயிர்துறக்க எண்ணினாள். கற்பின்மிக்க அம்மாதரசி கூந்தலில் நறுமலர்சூடி, மஞ்சள் குங்குமமணிந்து, இடையில் நல்லுடையணிந்து, உடம்பில் வாசனைகமழும் நற்சாந்தம் பூசி, மயானத்தையடைந்து, தீ வளர்த்து, வழிபடுதெய்வத்தை வணங்கி, "என் மணாளனுடன் மறுமையிலாவது மனமகிழ்ந்து வாழ்வேனாக" என்று குளிர்ந்த தாமரைத்தடாகத்தில் நீராட இறங்குபவளைப்போலத் தீக்குழியில் இறங்கினாள். அவளது கற்பின் பெருமையைக்கண்டு கனலும் அவளை அணுகாது சூழ்ந்துநின்றது; பன்னீர்போற் குளிர்ந்திருந்தது; அவளது கருங்குழலிற் சூடியிருந்த மருமலர் வாடாமல் நிறங்குன்றாமல் முன்போலவே இலங்கிற்று; அவள் உடுத்தியிருந்த நல்லுடை நிறம் மாறாதிருந்தது; உடம்பிலணிந்திருந்த சாந்தம் முன்போலவே நறுமணங் கமழ்ந்தது. இவ்வாறு ஆதிரை கொழுந்துவிட்டெரியும் அக்கினியின் நடுவில் தாமரைமலரில் வாழும் பூமகளைப்போலப் பொலிவுடன் விளங்கினாள். அவளது கற்புத் தீ அந்த நெருப்பைச் சுட்டது; என்னே கற்பின் பெருமை? இப்புதுமையைக் கண்ட ஆதிரை தன் விதியைநொந்து, ஐயோ! பாவியென்று தீயும் என்னைச் சுட அஞ்சுகிறதுபோலும்; இனி என்செய்வேன்? தெய்வமே! திக்கற்ற எனக்கு நீயே துணை" யென்று கல்லுமுருகக் கதறியழுதாள். அம்மடமங்கையின் துன்பத்தைக்கண்டு பேய்களுமிரங்கின, "மாதே! உன் கணவன் உயிர்துறந்தானல்லன்; கடலினின்றுந்தப்பி நாகர் வாழும் நாடு சேர்ந்துள்ளான், இன்னுஞ் சிலநாட்களில் சுகமே வந்து நின் மனக்கவலையை மாற்றுவான்; வருந்தற்க" என்று ஒரு அசரீரி ஆங்கு எழுந்தது. அதனைக்கேட்ட ஆதிரை ஒருவாறு மனந்தேறி சிறிது மகிழ்ச்சியும் வருத்தமுங்கொண்டு தனது இல்லம் சென்று

கணவன் கடிதில் வரவேண்டுமென்று வழிபடு தெய்வத்தை வணங்கி வந்தாள்.

இஃதிவ்வாறாகக் கடலினின்றுங் கரையேறிய சாதுவன் கடற் கரையில் அயர்ந்து கண்டுஞ்சினன். அவ்வழியாக வந்த அந்நாட்டு மக்கள், அயலான் ஒருவன் அயர்ந்து தூங்குவதைக்கண்டு களிகூர்ந்து தமக்கு அன்று நல்லுணவு கிடைத்ததென்று மகிழ்ந்து, அவனைத் தூக்கிக்கொண்டு தம் அரசனிடம் சென்றார்கள். சாதுவன் கண் விழித்துப்பார்த்தான்; தன்னைச்சுற்றிப் பேயுருக்கொண்ட வேற்று மக்கள் நிற்பதைக்கண்டு நடுங்கினான். அவனைக் கண்ட அரசன் அந்நாட்டு மொழியில் "நீ யார்? இங்கு எவ்வாறு வந்தாய்? நின் வரலாறு என்னை?" என்று வினவினான். அம்மொழியைச் சாதுவனும் ஒருவாறு உணர்ந்திருந்தானாதலால், தனது ஊரும் பேரும் உரைத்துத் தனக்குக் கடலில் நேர்ந்த கடுந்துன்பத்தையுங் கல்லும் உருகுமாறு உரைத்தான். அதைக்கேட்ட நாகமன்னன் மனமிரங்கி அவன் பசியை நீக்குமாறு கள்ளும் ஊனும் வரவழைத்துத்தருமாறு காவலர்க்குக் கட்டளையிட்டான். அது கேட்ட சாதுவன், "ஐயா! உனக்கு வந்தனம், என்னை மன்னிக்கவேண்டும்; ஊனும் கள்ளும் நான் உண்ணமாட்டேன்; பசியால் என் ஆவி பிரிந்தாலும் இப் பொருந்தாவுணவை நான் அருந்தேன்" என்றனன். அது கேட்ட அரசன் வியப்புற்று "சாதுவா! இவ்வுலகில் வாழும் மக்களுக்கு ஊனைப்போல் இன்பந்தரும் உணவும், கள்ளைப்போல் களிப்பைத் தரும் பானமும் வேறுளவோ? இவற்றை வேண்டாமென்று மறுக்கும் மக்களும் உளரோ? இவை நமக்காகத்தானே படைக்கப்பட்டிருக்கிறது?" என்று வினவினான்.

சாதுவன் "ஐயா! நன்று கூறினாய்? கொல்லா விரதமே எல்லா விரதங்களிலும் உயர்ந்தது; ஊனைத்தின்று ஊனைப்பெருக்கலாமா? பிற உயிருக்குத் துன்பஞ்செய்தல் மகாபாவம்; அவைகள் நமக்காகப் படைக்கப்படவில்லை; நம்மை ஒருவன் கொன்று தின்னவந்து "எனக்காகத்தான் நீ படைக்கப்பட்டிருக்கிறாய்" என்று கூறினால் நாம் என்ன சொல்லுவோம்? இந்த ஞாயத்தை உற்றுப்பார்ப்பாயாக மன்னுயிரனைத்தையும் தன்னுயிர்போல் காப்பாற்றுவதே மக்களுடைய கடமை; இலைகளையும், காய்கனிகளையும், கிழங்குகளையும், தானியங்களையும் நாம் புசித்தல்வேண்டும்; எந்த உயிரை எவன் இம்சிக்கிறானோ? அந்த உயிர் அவனை மறுபிறவியில் இம்சிக்கிறது;

கொலைக்கு ஆதாரமாக அறிவை மயக்குவதால் கள்குடிப்பதும் பெரும் பாவமே; ஆவியீடேறவேண்டுவோர இவற்றை ஒருபோதும் அருந்தார்.

"நல்லறஞ் செய்வோர் நல்லுலகடைதலும்
அல்லறஞ் செய்வோர் அருநரகடைதலும்
உண்டென வுணர்தலின் உறவோர் களைந்தனர்"

என்று இன்னோன்ன நீதிநெறிகளை அவன் மனதிற்படுமாறு மிகவுந்தெளிவாக எடுத்துச் சாதுவன் கூறினன். இவ்வறவுரையை கேட்ட மன்னன மனந்தெளிந்து, அன்றுமுதல் கள்ளையும் ஊனையும கடிந்து, தன குடிமக்களையும் அவற்றை விலக்குமாறுசெய்து கொல்லா நெறியைத் தன் நாடுமுழுவதும் பரப்பினன். சாதுவன்பால பல நீதிகளைக்கேட்டு அதன்படி ஒழுகத்தலைப்பட்டான். சாதுவனும் அந் நகர மக்களுடனும் அரசனுடனும கலந்து அடிக்கடி அநேக நல்லுரைகளைக்கூறி இனிது வாழ்ந்தான். இடையிடையே தன் மனைவியை நினைந்து நெஞ்சம் நெகிழுவான.

இவ்வாறிருக்கையில ஒருநாள சந்திரதத்தன் என்னும் வணிகனது மரக்கலம் வழிதப்பி அந்நாகநாட்டின் கரையை அடைந்தது. அதைக்கண்ட சாதுவன பெரிதும மகிழ்ந்து அக்கப்பலிடம்வந்து தலைவனை நோக்கி, "எங்கு செல்கிறீர?" என்று வினவினன். அவ்வணிகன் "ஐயா! எனது கப்பல் காவிரிப்பூம்பட்டினம் வரை செல்லும" என்றனன். "பழம் நழுவிப் பாலில் விழுந்தாப்போல" சாதுவன் கேட்டு மகிழ்ந்து, அரசனிடமும் அந்நாட்டு மக்களிடமும் விடை பெற்றுக்கொண்டு கப்பலிலேறினன். அரசனும் மக்களும் அவன் பிரிவைக்குறித்துப் பெரிதும் வருந்தினார்கள். சாதுவன் இடையூறின்றித் தன்னகர் அடைந்து நெடுநாள் பிரிந்து துன்பவலையில் மூழ்கிப்பொலிவிழந்திருந்த கற்பினமிக்க ஆதிரையைக்கண்டு களிப் பென்னும் கடலில் மூழ்கினன. ஆதிரை நாயகனைக்கண்டு பன்முறை வணங்கி கண்ணீரால அவனது திருவடியை விளக்கி இன்புற்றனள். மலரும மணமும்போல இருவரும் பன்னாள் இன்பமாகவாழ்ந்தார்கள.

சாதுவனும ஆதிரையும் கருத்தொருமித்து இடையறாத அன்புடன் இல்லறம நடாத்துகையில், அந்நகரில் மாதவியின் மகளாகிய மணிமேகலை வந்தடைந்தனள். அம்மாது துறவறநெறியை மேற்கொண்டு, வறுமையால் வருந்தும ஏழைமக்களது பசிப்பிணியை

நீக்கும் அறப்பணியை யாற்றிவந்தனள். மணிமேகலையின் தண்ணருள் நிறைந்த தருமசிந்தையை உணர்ந்த ஒரு தெய்வம் அவளுக்கு ஓர் பாத்திரத்தை நல்கியது. "அப்பாத்திரத்தில் கற்பிற் சிறந்த மங்கையின் கையால் அன்னம் அளிக்கப்பெற்றால் அவ்வன்னம் அள்ள அள்ளக் குறையாமல் உலகம்முழுவதும் திரண்டு ஒருங்கே வந்தாலும் உணவளிக்குந்தகுதியுடையதாய் விளங்கும்" என்று அத் தெய்வங் கூறியிருந்தது. அவ்வாறே மணிமேகலை அப்பாத்திரத்தைக் கரத்திலேந்தி நெடுநாளாக அன்னமேற்றும் அதன் பயனையடையாதவளாய ஒருநாள் மாசிலாக் கற்புடைய ஆதிரையின் திருமனைக்கேகி சித்திரப்பாவைபோல் நின்றாள். அம்மாதைக் கண்ட ஆதிரை அக மகிழ்ந்து "பாரகமடங்கலும் பசிப்பிணி பறுக" என்று வாழ்த்தி மணிமேகலையை மும்முறை வலம்வந்து வணங்கி அவள் கரத்திருந்த பாத்திரம் நிறைய இன்னமுதனைய அன்னம் அளித்தாள். அன்றுமுதல் "அமுத சுரபி" என்று பேர்பெற்ற அப்பாத்திரம் வழங்கக் குறையாத வளத்தினையுடையதாகி, உலகிலுள்ளோர் அனைவருக்கும் பசிப் பிணியை நீக்கி பொன்று நலனை நல்கியது. மாநிலத்தில் வாழ்ந்த மக்கள் அனைவரும் பசிநோய் நீங்கப்பெற்று ஆதிரையைப் பல்லாண்டு வாழ்த்தினார்கள். கற்புடை மங்கையரால் செய்யத்தகாத காரியம் மூவுலகிலுமில்லை என்று எல்லோரும் கொண்டாடினர்.

(தொடரும்).

---

## வினா விடை மணிகள்.

(ஆதிசங்கரர்)

க்ரஸ்மாத் ஸித்திஸ்தபஸோ புத்தி: க்வநு பூசுரேகுதோ புத்தி:।
வுத்தோப ஸேவயா கே வ்ருத்தா யே தர்மதத்வக்ஞா ॥

வினா. எதனால் காரியஸித்தி உண்டாகிறது?
விடை: தபஸினால் (ஏகாக்ரசித்தனாக ஒரு காரியத்தில் நினைவிருப்பது).
வினா: தபஸ் எதனால் உண்டாகிறது?
விடை: புத்தியினால்.
வினா: புத்தி எங்கிருக்கிறது?
விடை: பிராமணனிடத்தில்.
வினா: நிஜமான புத்தி எது?
விடை: பெரியோரை அடுத்துச் சிசுருஷைசெய்து அடையும் புத்தி.
வினா: பெரியோர் யார்?
விடை. தர்மதத்துவங்களை யறிந்தவர்கள், அவர்கள் சிறியோராகவிருப்பினும் பெரியோர்களே.

ஸ்ரீவள்ளிநாயகன் துணை.

# மோனமென்பது ஞானவரம்பு

"மோனமேன்பது ஞான வரம்பு" என்ற வாக்கியம் ஔவைப் பிராட்டியாரின் அமுத மொழி. அதாவது "மௌனம் என்பது ஞானத்தின் எல்லை அல்லது ஞானத்தையடையும் வழி" என்று பொருள். மௌனம அல்லது மோனம் என்றால் சும்மா இருப்பது என்றும் பொருளபடும். சத்துவம இராஜசு, தாமசு என்ற மூக்குணங் களில் இது சத்துவகுணத்தைச் சேர்ந்தது. சாதாரணமாக ஒருவன் வாய் பேசாமலிருந்தால் அவன் மௌனமாயிருக்கின்றான் என்று கூறுவது உலகவழக்கம். ஆனால், பேசாமல்மட்டுமிருந்தால் ஞானம் கிட்டிவிடுமா? அப்படியாயின் ஊமைகளெல்லாம ஞானிகளாக வேண்டுமன்றோ? சன்னியாசிகள், துறவிகள் இவர்களில் சிலர் வாய் பேசாமல், அவசியமாக வெளியிடவேண்டிய எண்ணங்களை எழுதிக் காட்டுவதுண்டு. இத்தகையோர் ஒரு காரியசித்திக்காக குறித்த காலம் வரையில் மௌன விரதத்தை யனுஷ்டிப்பார்கள். அதனால் பிறர் அவர்களிடம் அதிகமாகப் பேசுவதற்கு இடமில்லாமற் போகிற படியால், அவர்களது மனம நாட்டப்பட்ட நிலைமையினின்று சலிக் காமலிருக்க அனுகூலமாகிறது. ஆயினும் இவைகள் பூரணமௌன மாகா. கீழ்க்கண்ட மூன்றுவித மௌனங்களடங்கியதே பூரண மௌனம்; அதுவே ஞானிகளுடையும் மௌனம்: 1. வாக்கு மௌனம்: வாய்திறந்து எதையும் பேசாதிருத்தல்; 2. காஷ்ட மௌனம்: அவயவங்களால் ஒரு வேலையும செய்யாதிருத்தல்; 3. மனோ மௌனம்: மனதால் எதையும் சிந்திக்காதிருத்தல்.

ஒரு காரியம் நடக்கவேண்டுமாயின, மனம், இந்திரியம், புலன் மூன்றும சேர்ந்தே அது நடக்கவேண்டும். இந்த மூன்றிலே மனமே முதலில் ஒன்றை நினைக்கவேண்டும்; பிறகு அது இந்திரியத்தின் உதவிகொணடு புலன்வழியாய் வெளிவிஷயங்களையுணர்ந்து கருமேந் திரியங்களால் செய்கிறது. மனம் நினைக்காவிட்டால் ஒரு காரியமும் நடவாது. ஆகையால் மனோ மௌனமே ஞானத்திற்கு முக்கிய சாதனமாகும். மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகாணங்களாலும

நாம் கருத்தைச் செய்கிறோம். மனதால் நினைப்பதாலும், வாக்கால் வசனிப்பதாலும், காயத்தால ஒன்றைச் செய்வதாலும் நாம் பாவ புண்ணியங்களைச் செயகிறோம். மனமடங்கிவிட்டால் கன்மமே யொழிந்துவிடும். மனம சலனமற்றபோது சத்துவகுண மாத்திர மாகச் சேடிக்கிறது. மனதின் உருவநிலையே அதன் இராஜோ தமோ குணங்களாம். அருவ நிலையே அதன் சத்துவகுணமாம். மனோலய மடைந்த ஞானிகள ஈசுரார்ப்பணமாகக் கனவுபோல் காரியங்களைச் செய்தாலும அவாகளுக்கு கர்மம உணடாகாது.

மனமொடுங்கினால ஆன்மா அந்தச் சுத்த சத்துவவிருத்தியால் தன்னைத் தானடைகிறது ; அதாவது ஞானத்தையடைகிறது அத னாலே "மோனமென்பது ஞான வரம்பு" எனக்கூறப்பட்டது. மனம் உள்ளும் வெளியுமாகிய இரணடுவழிகளில் தொழில் செய்கிறது. வெளியில் இந்திரியவாயிலாகப் புறமபோந்து விஷயங்களில் பிரவே சிக்கிறது ; உள்ளே மனோராச்சியம் செய்கிறது. ஒவ்வொரு சமயம் நாம் வெளிவிஷயங்களைக் கவனிப்பதைவிட்டு மனோராச்சியமும் செய் யாமல் (அதாவது மனதில் ஒன்றும சிந்தியாமல்) சும்மாவிருக்கிறோம். அப்போது அருகிலுள்ளோா பேசுவதும நமக்குக்கேட்காது. எதி ரில் ஒருவர் சொல்லுவதும் தெரியாது. ஏனெனில், மனம் எந்த இந்திரியத்தோடும் சம்மந்தப்படாமலும் எதையும் சிந்திக்காமலுமிருக் கிறது ; ஆகவே மௌனமாகிய நிலைமை.

ஒரு தடாகத்தில் நீர் கலங்கி அலைகள் வீசிக்கொண்டிருக்கையில் அத்தடாகத்தின் அடியில் என்ன இருக்கிறதென்று தெரியாது. அத் தகைய தடாகத்தைப்போன்றது சலனத்தோடுகூடிய மனம். அலை களின்றி அசைவற்ற தெளிவான நீரையுடைய தடாகத்தில் அடியி லிருக்கும் வஸ்துக்கள் புலப்படும். சலனமறற ஏகநிலையில் நிற்கும் மனம் அதாவது சத்துவகுணமாத்திரமாகச் சேடித்துநின்ற மனம் அலையற்ற தடாகம்போன்றது : அப்போது அதன் அடியிலுள்ளது தோன்றும். மனதின் அடிப்பாகமே அது உதிக்குமிடம். ஆகை யால் அங்கு நோக்க, அதாவது மனம் எங்கிருந்து உதிக்கிறது என்று நோக்க, ஆன்மதரிசனம் உதயமாகும்; ஏனெனில், ஆன்மாவினின்றே மனம் உதிக்கின்றது.

தாயுமானவர் மனதை நோக்கி "நின் சன்மதேசத்தில் நீ செல்லல்வேண்டும்" என்றார். அதாவது "மனமே நீ எங்கிருந்து வந்தாயோ அங்கு போய்ச்சேர்" என்றார். இன்னும் அம்மகானே,

"சும்மா விருக்கச் சுகமுதய மாகுமே
இம்மாயா மோகினி யெனடா—தம்மறிவின்
சுட்டாலே யாகுமோ சொல்லவேண்டாங் கன்ம
நிட்டா சிறுபிள்ளாய் நீ" என்றும்

"சும்மாவிருக்கச் சுகஞ்சுகமென்று சுருதி யெல்லா
மம்மா நிரந்தரஞ் சொல்லவுங் கேட்டு மறிவின்றியே
பெம்மான் மௌனி மொழியையுந் தப்பி யென்பேதைமையால்
வெம்மாயக் காட்டி லலைந்தேன் அந்தோவென் விதிவசமே"
என்றும்

"சும்மா விருப்பதுவே சுட்டற்றபூ ரணமென்று
எம்மாலறிதற் கெளிதோ பராபரமே" என்றும் அருளியதும், குமரக்கடவுளின் திருவருள்பெற்றுத் திருப்புகழ் பாடியருளிய அருணகிரிநாதர் கந்தரனுபூதியில்

"சும்மாவிரு சொல்லற வென்றலுமே
யம்மா பொருளொன்று மறிந்திலனே"

என்று அருளியுள்ளதும் ஈண்டு சிந்திக்கற்பாலன.

இந்த மோனநிலையை யடைதற்கு ஆசை யொழியவேண்டும். எல்லோரும் ஏககாலத்தில் இதை யடையமுடியாது. மனம் ஒரே சிந்தனையில் நிற்பதே கஷ்டம்; சதா ஒருசிந்தனைவிட் டொருசிந்தனை யிற் குதித்து அலைந்துகொண்டேயிருப்பதுதான் அதன் சுபாவம்; வேதத்தில் மனதைக் குரங்கிற்கே ஒப்பிட்டிருக்கிறது. எத்தகைய குரங்கெனில்: குரங்கு கள்ளைக் குடித்துவிட்டால் அதிக சேட்டை செய்யுமன்றோ? அதோடு அது காரமாய இஞ்சியை மென்றுவிட்டால் இன்னும் அதிக சேட்டை; அதோடு அதைத் தேளுங் கொட்டிவிட் டாலோ சொல்லவேண்டியதில்லை; அதுவும் போதாதென்று ஒரு பேயும் பிடித்துக்கொண்டால் அக்குரங்கு எப்படியிருக்கும்? அத் தகைய குரங்கிற்குச் சமதையாக மனதையொப்பிட்டிருக்கிறது.

ஆகையால் முதலாவது ஆசையைக் கொஞ்சங் கொஞ்சமாக அடக்கவேண்டும்; மனம் இச்சா சொரூபம்; இச்சையை யொழித் தால் மனமடங்கும்; அதோடு மனதை முதலில் குறித்த ஒரு சிந்தனை யிலேயே நிறுத்தப் பழகவேண்டும். அதற்கே சகுணோபாசனை வைக்கப்பட்டிருக்கிறது. உலகபோகத்திலிருக்கும் இச்சையை உபாசனமூர்த்தியிடம் செலுத்தி (அதுவே பக்தியெனப்படுவது)

மனதை அங்கு நிறுத்திப் பழகவேண்டும். அதில் திடப்பட்டு அனுபவம் முதிரமுதிர மனவொடுக்கம சித்திக்கும். இது மிகக் கஷ்டமானதேயாயினும் சாத்தியமானதே. சும்மாவிருப்பதுவே மிகக் கஷ்டம்; இது சோம்பலல்ல; இதில்தான் மனம் தன பூரண சுறுசுறுப்போடு வேலைசெய்கிறது; மனதை யதன் இச்சைப்படி விட்டுவிட்டு அதன் பின் அலைவது கஷ்டமல்ல, ஒரு குதிரையை அதன் மனம்போனபடி முரட்டுத்தனமாய் மேடுபளளம பாராது பாய்ந்தோடும்படி விட்டுவிடுவது கெட்டிக்காரத்தனமல்ல; கஷ்டமுமல்ல. அதன கடிவாளவாரை யிழுத்துப்பிடித்து, அதையடக்கி நிறுததுவதே கஷ்டம். அப்படிச் செய்பவனே சாமர்த்தியவான். மனதை யடக்கியாளக் கற்றவனே உண்மை வீரன; அவனே புருடனெனப்படுவான; நமது முனனோர் அச்சக்தியாலேயே திரிகால ஞானிகளாய் அபூர்வ காரியங்களைச் செயதார்கள் இத்தெயவீக சாத்திரம் நமபுண்ணிய பூமியிலேயே அநாதியாயுள்ளது. ஆகையால் நாம ஒவ்வொருவரும இதற்கு முயற்சி செய்யவேணடும். ஏனெனில் மனிதன் அடையத்தக்க பேரின்பப்பேற்றை யளிக்கவலலது இம்மார்க்கமொன்றே.

"ராமு"

---

## யக்ஷப்பிரஸ்னே.

கே: யஞத்திற்குறிய முககியமான ஸாமம் எது?

ப: உயிரே யக்ஞததிறகுறிய முககியமான ஸாமம்.

கே: யகஞததிற்குறிய யஜுஸ் எது?

ப: மனமானது யகஞததிற்குறிய முககியமான யஜுஸ்.

கே: இவர்களுடைய யகஞததை எது வரிககிறது?

ப: ரிககொன்றே யகஞததை வரிககிறது.

கே: யகஞமானது எதை மீராமலிருககிறது?

ப: யகஞமானது அநத ரிககை மீராமலிருக்கிறது.

கே: பயிரிடுபவர்களுககு எது சிறநதது?

ப: பயிரிடுபவர்களுககு மழை சிறந்தது?

கே: விதைபபவர்களுககு எது சிறந்தது?

ப: விதைப்பவாகளுககு விதை சிறந்தது.

கே: பிரதிஷ்டையை விருமபுகிறவர்களுககு எது சிறநது.

ப: பிரதிஷ்டையை விரும்புகிறவர்களுககுப் பசுககள் சிறந்தவை.

கே: பெறுகிறவர்களுககு எத் சிறந்தது?

ப: பெறுகிறவாகளுககுப் புததிரன சிறநதவன.

உ

ஓம் குஹாய நம.

# குரு சிஷ்ய லக்ஷணம்

சச்சிதானந்தன்.

## சிஷ்ய லக்ஷணம்.

(192-வது பக்கத் தொடர்ச்சி)

ஆகவே குருநாதனுக்கு விரோதமான காரியத்தைச் செய்யக் கூடாது. அவர் மனம் கோணாமல் நடந்துகொள்ளல் வேண்டும், ஏனெனில், குருநாதன் கோபித்தால் ரக்ஷிப்பவர் ஒருவரும் இல்லை. சிவன் கோபித்தால் குருநாதன் காப்பாற்றுவார். குருகீதையில்:

"சிவேருஷ்டே குருஸ்த்ராதா குரௌருஷ்டே நகஸ்சந
லப்த்வாகுல குரும்ஸம்யக் குருமேவஸமாஸ்ரயேத்:

என்றும்;

ஆத்ம புராணத்தில்:

தெருளுறு சிவன் சினந்திடிற்றேசிகன் காக்கும்
அருளுருக்குரு முனிந்திடிலானருளாறல்
இருளறப்புரி யிந்துசேகரன்றன் பூசையினும்
அருளிறைக்குரும் பூசையை யதிகமாற்றுகவே.

பொருளாசையினாலாவது கர்வத்தினாலாவது குருநாதனுடன் விவாதஞ்செய்யப்படாது; இரண்டாயிர வருடங்களுக்குமுன் பட்டபாதர் என்ற பெரியார் பௌத்தமதத்தைக் கண்டிப்பதற்காக பொய்யாக ஒரு பௌத்தரைப்போல் வேடம்பூண்டு அவர் சாஸ்திரத்தை கற்றுக்கொண்டு அவர்களிடமே வாதம் செய்து மீமாம்சகமதத்தை பிரசாரஞ்செய்தபிறகு, கொஞ்சங் கொஞ்சமாக சரீரத்தை வேகச் செய்யும் உமிக்காந்தல் அக்கினியில் இறங்கிவிட்டார். அப்பொழுது சங்கராச்சாரியார் திக்விஜயஞ் செய்துக்கொண்டு அவ்விடத்துக்கு வந்தார். அச்சமயத்தில் பட்டபாதர் துஷாக்கினி பிரவேசம்செய்து விட்டாரென்று கேட்டவுடன் விரைந்துசென்று பட்டபாதரே எதற்காக உமிக்காந்தல் அக்கினியில் இறங்கினீரென்றார். அப்பொழுது பட்டபாதர் நான் பௌத்த குருவிடம் பொய்சொல்லி அவர்கள் மத விஷயத்தை தெரிந்துக்கொண்டு அவர்களிடமே வாதம்பண்ணி

னேன்; ஆதலால் நான் குருத்துரோகியாகிவிட்டேன்; இதற்கு என்ன ப்ராயச்சித்தமென்று தாமசாஸ்திரங்களைப் பார்த்தேன்; குருத் துரோகிகள் மிகவும் கஷ்டமான மரணத்தை ஏற்றுக்கொள்ளவேண்டு மென இருந்தது; அதற்காக நான் இப்படிச் செய்துக்கொண்டே னென்று கூறினார். ஆதலால் எப்பொழுதும் குருநாதனுடன் வாதம் செய்யப்படாதென்று இதனால் நன்கு விளங்குகின்றது. குருநாத னுக்குப் பணிவிடை செய்வதில் சோம்பலில்லாமல் குற்றம் குறைவரா மல் செய்யவேண்டும். பாதஞ்ஜலயோக சூத்திரத்தில் (ஈசுரப்ரணிதா ணாத்வா) என்கிற சூத்திரத்தில் (போஜராஜரும்) ப்ரணிதானமாவது பயனைக் கருதாமல் பரமகுருவினிடத்தில் பணிவிடைசெய்யுந் தன்மை என்று எழுதினார். குருநாதன் எந்தவேலையைக் கட்டளையிடுகிறாரோ அது தர்மமாக இருந்தாலும் அல்லது தாமத்துக்கு விரோதமாக இருந்தாலும் அதை சிரமேற்கொண்டு செய்யவேண்டும்.

இவ்வாறு குருமூர்த்திக்குத் தொண்டு செய்வதில் சிரமத்தை நோக்காமல் அடிமைபோல் செய்யவேண்டும். அவரிடத்திலிருக் கும்போது அங்குமிங்கும் பாராமல் அவர் திருமுகத்தையே தரிசிக்க வேண்டும்; அவரது திருநாமத்தையே ஜெபிக்கவேண்டும்; அவரது அரும்பெரும் வாக்கியங்களையே கேழ்க்கவேண்டும்; அவரது திரு மேனியையே திருவுள்ளத்தில் சதாகாலமும் சிந்திக்கவேண்டும்.

தெளிவு குருவின் திருமேனியைக் காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே —(திருமந்திரம்).

குருநாதனுடைய பாதாரவிந்தங்களில் அன்பில்லாமல் கடவுளி டத்தில் அன்பிருந்தாலும் அது கடவுளுக்கு பிரியப்படாது. அவர் களுக்கு பரகதிவாழ்வும் கிடைக்காதென்று உபதேசரத்தினமாலையில் கூறுமாறு காண்க.

தன் குருவின் றளிணைகள் தன்னிலன்பொன்றில்லாதார்
அன்பு தன்பால் செய்தாலு மப்புயைகோன் - இன்பமிகு
விண்ணாடு தானளிக்க வேண்டியிரானாதலால்
நண்ணாரவர்கள் திரு நாடு மேலும்:

சக்ஷுர்கம்யம் குரும் த்யக்த்வாஸாஸ்த்ர கம்யந்து யஸ்மரேத் காஸ்த ழுதகம் த்யக்த்வாக நஸ்த பிவாஞ்சதி ஸுலபம்து குரும் - த்யக்த்வா - துர்லபம்ய உபஸதே பத்தம் த்யக்த்வாதநம் ழுடோ குப்த மந்வேஷ தேக்ஷிதே

என்கிறபடி மனிதனுக்குக் கண்கண்டதெய்வமாக விளங்கும் குருவை வழிபடாமல் சாஸ்திரங்களினால் அறியத்தகுந்தவனும் எளிதிற காணக்கிடைக்காதவனுமாகிய கடவுளைத்தேடுகிறவன், காத்திலிருக்கும் கங்கையைக் கொட்டிவிட்டு மேகத்திலிருக்கிற ஜலத்தை எதிர்பார்க்கிறவனைப்போலவும, தன்னிடமிருந்த பொன் காசுகளை இழந்துவிட்டு மண்ணில் மறைந்துகிடக்கிற புதயலைத் தேடுகிறவனைப் போலவும் பயனற்றவனாகிறான்

ஆகவே குருவுக்குச் சமானமானவர்கள் ஒருவருமில்லை, தாய் தந்தைகளைவிட குரு மேலானவர்; எனெனில் தாயதநதைகள் காமத்தினால் புணர்ந்து எந்த ஜன்மத்தை உண்டுபண்ணுகிறார்களோ அந்தப் பிறப்பானது மிருகஜாதியைப்போல் அவையவங்களைமாத்திரம் கொடுக்கவல்லமையுள்ளது; இரண்டாவது பிரம்ம உபதேசத்தினால் குருவானவர் உண்டுபண்ணுகிறார்; அந்தப்பிறபபானது அழிவற்ற தாயும் மூப்பறறதாயும் புண்ணியலோகங்களைக் கொடுக்கிறது, குருநாதனைப்பூஜிப்பதால் பிதிர்களும், தேவர்களும பிரீதி அடைகிறாகள். ஆகையால் குருநாதரானவா தாய்தந்தையர்களைவிட மேலாகப்பூசிக்கத்தக்கவர். இதனை மனு, ஆபஸ்தமபோா முதலியோர்கள.

> உத்பாதக ப்ரஹ்ம தாத்ரோர் கரியாந் ப்ரஹ்மத. பிதா -
> ப்ரஹ்ம ஜந்மஹி விப்ரத்ய சேஹுசசாஸ்வதம்
> ஸஹி வித்யாதஸ்தம் ஜநயதிதச்ச்ரேஷ்டம்
> ஜன்மசரீரமேவ - மாதாபிதாரௌ ஜனயதௌதி

என்று கூறியிருக்கிறார்கள்.

குருநாதன் எவ்விதமோ அவ்விதம் மாதாபிதாவும் இல்லை என்பதில்லை. அம்மூவரையும் அவமதிக்கக்கூடாது. அவர்களே தெய்வமாகக் கொளளவேண்டுமென்பது.

> மாத்துரு தேவோபவ பித்துருதேவோபவ
> ஆசார்ய தேவோபவ

ஆசார்யன் பதது உபாத்தியாயனுக்குச் சமானமானவர்; பிதாவானவர் நூறு ஆசார்யனுக்குச் சமானமானவர்; மாதாவானவள் பிதாவைவிட நூறுமடங்கு கௌரவமுள்ளவள, இவர்களெல்லாரினும் குருவானவர் மிக்க மேலானவர். அவரைவிட மேலானவஸ்து ஒன்றும உண்டானதுமில்லை, உண்டாகப்போகிறதுமில்லை என்று சாஸ்திரங்களில் சொல்லப்படுகிறது. ஆதலின் அவரைவிடப் பூஜிக்கத் தக்கவர் ஒருவருமில்லை. (தொடரும்).